## கருப்பு யூலை நினைவு தினம் - பிரித்தானியா














1983ம் ஆண்டு இலங்கையில் பூர்வகுடி தமிழருக்கு எதிராக பெரும்பான்மை சிங்கள அரசினால் மிகவும் திட்டமிட்டு நேர்த்தியான முறையில் நடாத்தப்பட்ட பாரிய இன அழிப்பை நினைவு கூரும் முகமாக நேற்று (26.07.2009) கனத்த கறுப்பு யூலை தினம் இலண்டனில் ரவல்கர் ஸ்குயார் என்னும் இடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பெரும் திரலான மக்கள் கலந்து கொண்டு இலங்கை அரசினால் கொல்லப்பட்ட மக்களுக்கு மலர் அஞ்சலி செலுத்தினர். அன்றைய கனத்த நாட்களை நினைவில் கொண்டு கண்ணீர் மல்கிய மக்களை காணக்கூடியதாக இருந்தது.

தொடர்ந்து நடைபெற்ற நினைவு நிகழ்வில் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள், மனிதநேய ஆர்வலர்கள் உரையாற்றினர். இங்கு உரையாற்றிய சகலரும் உலகமே தமிழருக்கு துரோகம் இழைத்து விட்டனர் என்பதை அழுத்தம் திருத்தமாக கூறினர். இன்று முள்வேலியின் உள்ளிருக்கும் மக்களை சொந்த இடத்தில் மீள்குடியமர்தவாவது உலகநாடுகள் உதவி செய்ய வேண்டும், என்ற வேண்டுகோளை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன் பிரித்தானிய தமிழர் இசைக்குழுவினரும் , பிரித்தானிய தமிழர் கலைக்கழகத்தினரும் சேர்ந்து பிரித்தானியாவல் இலங்கைக்கு வழங்கப்பட்ட சுதந்திர நாள் முதல் இன்று வரை தமிழர்கள் படும் வேதனைகள், சோதனைகளை உணர்ச்சி பூர்வமாக அரங்க நிகழ்வில் தமிழ் ஆங்கில மொழிகளில் ஏற்ப்பாட்டாளர்கள் வழங்கியிருந்தனர்.

முதல் தடவையாக கனத்த கறுப்பு யூலை நினைவுநிகழ்வில் பெருந்திரளான வேற்று இனமக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## நினைவழியா பயணம்

நீண்ட நெடிய பயணங்களின்
பின்பு அங்கே தரித்து
நின்றோம்

செம்மண்ணின் வாசனையும்
வேலி கதியால்களில் பூத்திருந்த
முள் முருக்குகளின் பூக்களும்
தொலைந்து போயிருந்த
நினைவுகளில்
உயிர் தடவிற்று

கரிய நிற மாடு பூட்டி
வண்டில் ஒன்று கடந்து போனது

இருளும் நினைவும்
நிலவின்
ஒளியுடன் கலந்த இருந்த
பொழுதில் தான் நாம் அந்த
வீதியில்
அமர்ந்து கொண்டோம்

நேற்றும், முந்த நாளும்
அதற்கும் முன்பாகவும்
என் தோழர்கள்
உயிர் சரிந்து வீழ்ந்த
வீதி அது

ஒவ்வொரு அங்குல
நிலத்திற்காகவும் ஓர்மம் கெண்டு
போராடி களம் வென்ற
என் தோழர்களை
தாங்கி நி ன்ற
வீதி அது

என் பாட்டனின், அவனதும்
பாட்டனின் காலடிகளின்
தடம் காக்க, அவனின்
பரம்பரை போராடி காத்த
வீதி அது

கல்லாய் அமர்ந்து இருந்தோம்
அதில்
வீழும் தோழருக்கு
தோள் கொடுக்க
வழியின்றி இருந்துவிட்டு
வெற்றியின் பின் விருந்து
உண்ண அமர்ந்து இருந்தோம்

மரணித்த தோழர்களின்
குருதி வழிந்த கதைகளை
கேட்பதற்கு அமர்ந்து
இருந்தோம்

அவர்களின்
மரணம் தந்த
வெற்றியின் விழுதுகளை
சுவைபதற்காக
அமர்ந்து இருந்தோம்

கரிய வானில்
கரிச்சான் குருவி
ஒன்று ஒன்று ஏளனமாய் சிரித்து
விட்டு பறந்தது ,
தான் கூட
தோழர்கள் வலி மறக்க
இசை மீட்டகதை
சொல்லி சிரித்தது

எழுந்து மீண்டும் பயணம்
தொடரும் போது
நாங்கள்
ஒரு சிறு
குருவியை கூட
நிமிர்ந்து பார்க்கவில்லை

*-நிழலி-*

## வித்தியாசமாக புதுமொழிகள்

எலிக்கு காசு வந்தா ஏணி வச்சு குடை பிடிக்கும்.
பூனை இளைச்சா எலிக்கு மச்சான் முறை.
குயிலுக்கு அழகான உருவம் இருந்தா மயில் தூக்கில் தொங்குமாம்.
மேடையில் ஆடத்தெரியாதவன் ஜட்ஜா நமீதா வேணும்னு கேட்டானாம்.
பல்லிக்கு வாழ்வு வந்தா பன்னீரில் பல்லு விளக்குமாம்.
யானைக்குத் தும்மல் வந்தால் எறும்புக்கு சூறாவளியாம்.
கழுதைக்கு காலம் வந்தா கடவுளுக்கே கலர்ஸ் காட்டுமாம்.
யுரளளறைளக்கும் அடி சறுக்கும்.
வெளியில போற சனியனைத் தூக்கி பனியனுக்குள்ள போடுற மாதிரி சிவனேன்று போற சிங்கம்கிட்ட சிகரெட் கேட்டது யார்?

*- வெற்றி FM நேயர்கள்*




ஸ்ரீ கருமாரி அம்மன் ஜோதிட நிலையம்

SRI KARUMARI AMMAN
JOTHIDA NILAYAM

பண்டிதர் அர்ஜுன் ரெட்டி சாஸ்திரி

EELAM ENTERPRISES

164B, Mitcham Road, London SW17 9NJ
(Near Selvarajah Gold House)
Contact: PANDIT A ARJUN REDDY SASTRY
**Mob.: 07529 723 111, 07529 723 118**

Seven days a Week from 10.00 am. Till 10.00 pm.



**மெய்யன்பர்களே,**

**30 வருட அனுபவம் நிறைந்த பண்டிதர், கருமாரி அருள் கொண்டு கைரேகை மூலம், முகநாடிமூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்க இருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள் – கணவன் மனைவி ஒற்றுமை, குழந்தைப் பாக்கியம், கைரேகை, திருமண யோகம், தொழில், வியாதிகள், வியாபாரம், லட்சுமீகர விடயம், காதல், கல்யாணம், கோட்டு வழக்குகள், வாகனப் பொருத்தம், வீட்டு வாஸ்த்த, கண் திருஷ்டி ஆகிய அனைத்தும். துமிழ், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சாஸ்திரம் சொல்லப்படும். முந்திர தந்திரம், செய்வினைகள் போன்றவை ஹரி ஓம் மந்திரத்தினால் பரிகாரம் செய்யப்படும்.**

Pandit A Arjun Reddy Sastry



Through face – palm reading "Horescope" Date of birth, Numerology: So, come and consult him once. He will solve and guide all your problems like health, business, marriage, education, carrier/job, abroad, promotion, land. Court, birth of children, visa and family problems etc. He has done protection things for house, house vasthu, shop and personal matters etc. English, Tamil, and Hindi are the Languages of contact.

Confidentiality will be maintained for your secret matters.